பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 01 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

**1)** நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையுடன் நாளை தொடங்குகிறது.

**2)** நீர் சேமிப்பு திட்டங்களுக்காக மத்திய அரசு 32 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

**3)** கிண்டியில், குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டிடத்திற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

**4)** ஜல்லிக்கட்டு நமது கலாச்சாரத்தின் அடையாளம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

**5)** 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஜிம்பாப்வே வெற்றிபெற 353 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நாளை தொடங்குகிறது.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் நாளை உரையாற்றவுள்ளார்.

இந்த கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்த, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இக்கூட்டத்தில் பங்கேற்ற கட்சி பிரதிநிதிகளின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், மத்திய பட்ஜெட்டை வரும் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யவுள்ளதாக கூறினார்.

பொருளாதார ஆய்வறிக்கை, நாடாளுமன்றத்தில் நாளை மறுநாள் தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் கூட்டத்தில், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும், பின்னர் இரு அவைகளிலும் பட்ஜெட் குறித்த விவாதம் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த அனைத்து கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

இந்த பட்ஜெட் கூட்டத்தொடர், நாளை தொடங்கி, பிப்ரவரி 13ஆம் தேதி வரையும், மார்ச் 9ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2ஆம் தேதி வரையும் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>>

நீர் சேமிப்பு திட்டங்களுக்காக மத்திய அரசு 32 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் திட்டத்தில் 65 சதவீதம் நீர் சேமிப்புக்காக பயன்படுத்தப்படும் என்று கூறினார்.

நவாமி கங்கை திட்டத்தின்கீழ், 15 மாசு கட்டுப்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும், ஒரு கோடி நீர் சேமிப்பு நிலையங்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதுவரை 37 லட்சம் இத்தகைய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழ்நாடு டாக்டர் எம் ஜி ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பில் கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டிடத்திற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

இதுதொடர்பாக, மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **410** கோடியே **7** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள இந்த மருத்துவமனை **6** புள்ளி ஐந்து ஏக்கர் பரப்பளவில் தரைதளம் மற்றும் ஆறு தளங்களுடன் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**750** படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் தனித்துவமான வசதியுடன் உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சை பிரிவு, புறநோயாளிகளுக்கான பிரிவு, கதிரியக்க நோய் கண்டறியும் பிரிவு, உள்ளிட்ட **25**-க்கும் மேற்பட்ட பிரிவுகள் செயல்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா மாநாடு சென்னையில் அடுத்த மாதம் 2-ஆம் தேதி தொடங்க உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த இரண்டு நாள் மாநாட்டை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மாநில அரசின் சுற்றுலாத்துறையால் நடத்தவுள்ள இம்மாநாட்டில் மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தளங்களை மேம்படுத்துவதற்கும், சுற்றுலா முதலீட்டாளர்களுடன் பொது - தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் வழிவகை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா முதலீட்டாளர்கள், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், வர்த்தக நிபுணர்கள், சுற்றுலா தொழில் முனைவோர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ள உள்ளனர்.

<<<<<<<>>>>>>>

ஜல்லிக்கட்டு நமது கலாச்சாரத்தின் அடையாளம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் சாலப்பாளையத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர்,

ஆட்சிப்பொறுப்பேற்றால், ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் வீரர்களுக்கும், காளைகளுக்கும் காப்பீடு வழங்கப்படும் என்று கூறினார்.

ஜல்லிக்கட்டு விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தால், பத்து லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

**2030**-ஆம் ஆண்டுக்குள் சாலை விபத்துகளை **50** சதவீதம் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை ஐ ஐ டி-யின் ஆராய்ச்சிப் பிரிவு வழிமுறைகளை கண்டறியும் என்று அதன் இயக்குநர் பேராசிரியர் திரு காமகோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் **2023**-ஆம் ஆண்டு அதிகபட்சமாக **5** ஆயிரத்து **582** சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன.

சென்னை ஐ ஐ டி-யில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், **18** முதல் **60** வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த விபத்துகளில் மரணமடைந்துள்ளதாக ஐ ஐ டி-யின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விபத்து ஏற்படக்கூடிய இடங்கள் குறித்த தகவலை சேகரித்து, அதன்மூலம் விபத்து குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் ஆராயப்படும் என்று திரு காமகோடி கூறினார்.

*(Sound Byte — காமகோடி - 48 Sec.)*

<<<<<<<>>>>>>>

பனிப்பொழிவு காரணமாக பூக்களின் விளைச்சல் குறைந்துள்ளதால், கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை சந்தையில் பூக்களின் வரத்து குறைந்துள்ளது.

இதனால், பூக்களின் விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — குமார் - 43 Sec.)*

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில், பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவ, மாணவியருக்கு மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.

-------------

தூத்துக்குடி மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ், மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத் இன்று வழங்கினார்.

------------------

விழுப்புரம் மாவட்டத்திலும் அரசு கல்லூரி மாணவர்களுக்கு ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.

--------------

தென்காசி மாவட்டத்தில் நெகிழி ஒழிப்பு, வனங்களை பாதுகாத்தல், மரம் வளர்ப்பு போன்றவற்றை வலியுறுத்தி, மாவட்ட வனத்துறை சார்பில், ஆட்சியர் திரு கமல்கிஷோர் விழிப்புணர்வு பேரணியை இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

சேலம் மாவட்டம் ஓமலூரில் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

--------------------

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் தைப்பூச திருவிழாவினை முன்னிட்டு திருத்தேரோட்டம் இன்று நடைபெற்றது.

--------------

காஞ்சிபுரம் மாவட்டம் குமரக்கோட்டம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தை கிருத்திகையையொட்டி, சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Bulawayo**-வில் நடைபெற்று வரும், **19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் **353** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் ஜிம்பாப்வே சற்றுமுன்வரை **8** புள்ளி நான்கு ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **24** ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, பேட் செய்த இந்தியா **8** விக்கெட் இழப்பிற்கு **352** ரன் எடுத்தது.

<<<<<<<**END**>>>>>>